**தும்பனை பிரதேச சபை - 2023**
------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தும்பனை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்கள் அடங்கிய பொழிப்புக்களை நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தும்பனை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட காகிதாகிகள் பதிவேடுகள் மற்றும் துப்பரவு ஏற்பாடுகள் இருப்புக்கள் ரூபா 301,795 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நீர் துணைக்கருவிகள் இருப்பு ரூபா 505,653 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | விரைவாக தீர்க்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என. | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் சுஜாதா வித்தியாலயத்தின் முன்பக்க கட்டிடத்தின் உள்ளக சுவர்கள் நிர்மானிப்பதற்காக 03 சந்தர்ப்பங்களில் செலவிடப்பட்டிருந்த ரூபா 229,597 தொகை மூலதனச் செலவுகளின் கீழ் வரவு வைக்கப்படாமல் மூலதனச் சொத்துக்கள் திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. அதேபோல் அந்தச் செலவு மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | விரைவாக சரி செய்யப்படும் என. | சரியாக கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் காட்டப்பட வேண்டிய ரூபா 82,781 இற்கான 63 அலகுகள் காகிதாகிகள் இருப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 11,862,037 இற்கான 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,288,609 தொகை காணப்பட்டமையால் ரூபா 530,812 இற்கான வித்தியாசமொன்று இருந்தது. | வித்தியாசங்களை பரிசோதனை செய்து சரி செய்யப்படும் என. | கணக்கு மீதிகள் சரி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆண்டில் தயாரிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த அலுவலக உபகரண மீதி மற்றும் அதனொடு தொடர்புடைய அட்டவணையின் மீதியிடையே ரூபா 1,939,500 இற்கான இணக்கமின்மை காணப்பட்ட போதிலும், அவ்விணக்கமின்மைக்கான காரணத்தை கண்டறிந்து சொத்துக்களின் மீதியை சரி செய்யாமல் அட்டவணையில் நிலையான சொத்துக்களின் கீழ் சபை மண்டப மேசையொன்றென ரூபா 1,939,500 இற்கான சொத்தொன்று போலியாக காட்டப்பட்டு மீளாய்வாண்டு வரை கணக்குகள் சமர்ப்படுத்தப்பட்டிருந்தது. | விரைவாக கண்டறிந்து கணக்காய்விற்கு அறிவிக்கப்படும் என. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முறையான அங்கீகாரம் ஒன்றின்றி மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நாட்குறிப்புப் பதிவு 53 இன் கீழ் ரூபா 16,147,144 இற்கான 151 கடன்பட்டோர் மீதிகள் மற்றும் நாட்குறிப்பு பதிவு 54 இன் கீழ் ரூபா 40,979,132 இற்கான 347 கடன்கொடுத்தோர் மீதிகள் திரண்ட நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டது என. | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் பதிவழிக்கும் போது முறையான அங்கீகாரம் ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டும் என. |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 1,892,397 இற்கான 15 கடன்பட்டோர் மீதிகள் மற்றும் கடன் கொடுத்தோர் மீதியொன்று தொடர்பான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது. | தகவல்கள் உறுதிப்படுத்திய பின்னர் சரி செய்யப்படும். | கணக்கு மீதிகள் தொடர்பான ஆவணங்கள் நாளதுவரையாக பேணப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகார சட்டம்** | | | |
| | பிரிவு 154(1) | 03 ஏக்கர் 03 ரூட் 20.3 பர்சஸ் விதைக்கும் பரப்பளவுடைய மொரகஸ்கொடுவத்த எனும் காணி 35 காணித் துண்டுகளாக பிரிக்கப்பட்டு ரூபா 28,300,000 தொகைக்கு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு அனைத்துத் | குறிப்பிட்ட நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டது என. | அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட்டு விற்பனைப் பெறுமதிக்குரிய வரி அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | துண்டுகளும் ஏலவிற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 33 காணித் துண்டுகளின் விற்பனைப் பெறுமதியின் மீது அறவிடப்பட வேண்டிய 1 சதவீத வரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| (i) நி.பி. 104(3) மற்றும் 104(4) | 2014 முதல் 2023 வரையான காலப் பகுதியில் விபத்துக்குள்ளாகிய 05 வாகனங்களின் ரூபா 181,670 இற்காக நி.பி. விசாரணை பூர்த்தி செய்து பரிந்துரைகளை செயற்படுத்தியிருக்கவில்லை. | குறிப்பிட்ட விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ii) நி.பி. 571(3) | 2015 முதல் 2019 வரையான காலப் பகுதியில் காலவதியாகிய ரூபா 1,231,095 இற்கான 65 வைப்புக்கள் தீர்த்திருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை | 2020 – 2022 காலத்தின் பின்னர் சபைக்குச் சொந்தமான 03 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை செய்திருக்கவில்லை. | குறிப்பிட்ட விசாரணை விரைவாக மேற்கொள்ளப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி, 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 26,534,929 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 25,743,785 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 4,044,000 | 4,575,130 | 5,425,673 | 1,582,183 | 3,524,100 | 4,194,538 | 4,259,000 | 2,432,726 |
| ii. | வாடகை | 4,858,600 | 6,422,793 | 6,546,551 | 285,089 | 5,156,000 | 4,780,730 | 5,261,153 | 408,847 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,650,000 | 1,513,300 | 1,702,421 | - | 1,640,000 | 1,683,077 | 1,493,955 | 189,121 |
| iv. | ஏனைய வருமானங்கள் | 48,380,500 | 26,861,411 | 33,624,306 | 27,019,483 | 48,643,000 | 42,685,891 | 47,448,703 | 33,782,378 |
| | மொத்தம் | 58,933,100 | 39,372,634 | 47,298,951 | 28,886,755 | 58,963,100 | 53,344,236 | 58,462,811 | 36,813,072 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 1,017,262 தொகையாக காணப்பட்டதுடன், ஒரு அலகின் வீதவரி நிலுவை ரூபா 10,000 ஐ மிகைத்துள்ள 02 வீதவரி அலகுகளிலிருந்து கூட்டுத்தொகை ரூபா 44,580 தொகையாகவும் ரூபா 5,000 ஐ மிகைத்துள்ள 11 ஆதனங்களின் கூட்டுத்தொகை ரூபா 107,487 தொகையாகவும் இருந்தது. | நிலுவை வருமானம் சேகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

**(ஆ) ஏனைய வருமானங்கள்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 1,101,131 தொகையாக காணப்பட்டதுடன், அலகு ஒன்றின் நீர்க் கட்டண நிலுவை ரூபா 10,000 ஐ மிகைத்த 02 அலகுகளில் இருந்து ரூபா 33,706 தொகையும் ரூபா 5,000 ஐ மிகைத்த 18 அலகுகளில் இருந்து ரூபா 117,894 தொகை காணப்பட்டது. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

**(இ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 842,827 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 23,782,820 தொகையாக இருந்தது. | எதிர் காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் தருவித்துக் கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளில் மீண்டுவரும் வருமானம் பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படாமல் ரூபா 32,481,422 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | எதிர் காலத்தில் அபிவிருத்தி அலுவல்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மிகைப் பணம் அபிவிருத்தி அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,606,000 இற்கான 03 அபிவிருத்தித் திட்டங்கள் மீளாய்வாண்டு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் செயற்படுத்தப்படும் என. | குறிப்பிட்ட காலப் பகுதியில் நிறைவேற்ற வேண்டும். |
| (இ) | 2020 ஆண்டில் சபிரி கமக் சமூக அடிப்படை ஏற்பாடுகளின் கீழ் 02 நீர்ச் | செயற்திட்டத்தை உரித்தாக்கிக் கொள்வதற்கு | திட்டமிடப்பட்ட கருமங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டங்களின் கூட்டுத்தொகை ரூபா 4,000,000 இற்கான ஏற்பாடுகள் மீது உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தக்கார தரப்பினருக்கு நிர்மாண வேலை ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த இரண்டு நீர் செயற்திட்டங்களும் பயன்படுத்தக்கூடியவாறு வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் 2021 ஆண்டின் போது நிர்மாண வேலைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு அந்த செயற்திட்டத்திற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,890,024 இற்கான தொகை விளைவற்றுக் காணப்பட்டது. | மற்றும் நடாத்திச் செல்வதற்கு இயலுமை காணப்படவில்லை என. | நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஈ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 93(ஆ) ஏற்பாடுகளின் படி பிரதேசத்திலுள்ள வீடுகளில் மலக் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக முறைப் பிரகாரம் கிடங்குகள் உரிய காலத்தில் சுத்தம் செய்தல் மற்றும் காலியாக்குவதற்கு முடியுமானவாறு சாக்கடை வண்டிச் சேவையொன்று நடாத்திச் சென்றிருக்கவில்லை. | கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு பொருத்தமான இடமொன்று காணப்படவில்லை என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மத்திய மாகாண சபையின் கைத்தொழில் அமைச்சிலிருந்து வழங்கியிருந்த முன்னைய தலைவரினால் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனம் 2014 ஆண்டில் தீப்பற்றி விபத்துக்குள்ளாகியிருந்தது. அது தொடர்பாக முன்னைய தலைவரினால் பொலிஸில் முறைப்பாடு செய்து சட்டச் செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பாக விபத்து ஏற்பட்டு 03 வருடங்களின் பின்னர் நி.பி. 104(3) விசாரணை ஒன்று நடாத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை நி.பி. 104(4) விசாரணை மேற்கொண்டு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை இனங்கண்டிருக்கவில்லை. இந்த மோட்டார் வாகனம் முழுமையாக | நி.பி. 104(3) விசாரணை ஒன்று மேற்கொண்டு பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை இனங் காணப்படும் என. | பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை இனங்கண்டு நட்டத்தை அறவீடு செய்யப்பட வேண்டியதுடன், தேவையான சட்ட செயற்பாடுகளும் கடைபிடிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அழிவடைந்திருந்ததுடன், 2023 பெப்ரவரி 16 திகதிய சபை அறிக்கையின் படி இந்த மோட்டார் வாகனத்தை செயற்படு நிலைக்கு மாற்றுவதற்கு அறவிடப்பட வேண்டிய திருத்த வேலைச் செலவு ரூபா 1,009,400 தொகையாக காணப்பட்டமையால் அண்ணளவாக ரூபா 1,009,400 தொகை மிகைக்கக் கூடிய நட்டமொன்று ஏற்பட்டிருக்கின்றது என அவதானிக்கப்பட்டது. | | |

## 3.3 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,777,159 தொகையாக காணப்பட்டதுடன், சமர்ப்பிக்கப்பட்டிருந்த காலப் பகுப்பாய்வின் படி 03 வருடத்திற்கும் 05 வருடத்திற்கும் இடைப்பட்ட காலங்கள் தொடர்பான கணக்கு மீதிகள் கூட்டுத்தொகை ரூபா 1,431,615 தொகை மற்றும் 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 1,418,190 தொகையாக இருந்தது. | நிலுவையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,470,628 தொகையாக காணப்படுவதுடன், சமர்ப்பிக்கப்பட்டிருந்த காலப் பகுப்பாய்வின் படி 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்துக்குரிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 200,000 தொகை மற்றும் 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 4,000,000 தொகையினை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | விசாரணை செய்து தீர்க்கப்படும் என. | கடன் கொடுத்தோர் மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |
| (இ) | 1978 இன் 41 இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் விண்ணப்பப்பத்திரங்களின் குறைபாடுகள் | முறையான நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக கட்டிட அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்குவதை அங்கீகரித்திருக்காத போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் 03 சந்தர்ப்பங்களில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்ட போதிலும், சபையினால் நடவடிக்கை கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2014 ஆண்டின் போது பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக வழங்கியிருந்த ரூபா 4,000,000 தொகை குறிப்பிட்ட குறிக்கோள்களுக்கு புறம்பாக ஊழியர்களின் சம்பளம் செலுத்துவதற்காக பயன்படுத்தியமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நி.பி. 104(4) விசாரணையின் படி அதற்காக செலவிடப்பட்ட தொகையினை ஒரு மாத காலத்திற்குள் மாகாண சபைக்கு செலுத்துதல் அல்லது அவ்வாறு செலுத்தப்படாவிடின் மாகாண சபையினால் வழங்கப்படும் முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணத்தை தடுத்து வைத்து அந்தத் தொகையை குறிப்பிட்ட அமைச்சுக்கு அனுப்பப்பட வேண்டும் என வழங்கியிருந்த பரிந்துரை மீளாய்வாண்டு இறுதியளவிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி நிறுவனங்களை அறிவுருத்தப்பட்டது என. | முறையான அங்கீகாரங்களின் கீழ் செலவிடப்பட வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 27,020,461 இற்கான 04 வாகனங்கள் மற்றும் இயந்திரமொன்று 01 வருடத்திற்கும் மற்றும் 08 வருடங்களுக்கும் இடைப்பட்ட கால வீச்சில் விளைவற்று மற்றும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | திருத்த வேலைகள் மேற்கொண்டு பயன்படுத்தக் கூடிய சொத்துக்களை திருத்த வேலை மேற்கொள்வதற்கும் ஏனைய சொத்துக்களை அப்புறப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்படும் 50 மயானங்களின் காணி உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சாட்டுதல் கட்டளை பெற்றுக்கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது என. | சட்டரீதியாக உரிமையை உரித்தாக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணிகள் மற்றும் கட்டிட பதிவேடுகளில் காணப்பட்ட கூட்டுத்தொகை 17 ரூட் 127 பர்சஸ்களுக்கான 05 காணித் துண்டுகளின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படும் என. | சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகைகள்** | | |
| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியை இணக்கஞ் செய்த போது அவற்றில் 10 பதவிகளுக்கான 20 வெற்றிடங்களும் 02 பதவியில் 20 மிகைகளும் காணப்பட்டன. | வெற்றிடங்கள் தொடர்பாக உரிய தரப்பினரை அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் மிகைப் பதவியணி கடமைகளுக்காக ஈடுபடுத்தப்படும் எனவும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் படி குறிப்பிட்ட அலுவல்கள் மேற்கொள்ள வேண்டும். |
| **(ஆ)** | **ஊழியர் கடன்** | | |
| | 2018 முதல் 2023 ஆண்டு வரையான காலப் பகுதி தொடர்பாக இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த மூன்று உத்தியோகத்தர்களிடம் ரூபா 304,287 இற்கான கடன் மீதியொன்று அறவீடு செய்திருக்கவில்லை. | இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | கடன் அறவிடப்பட வேண்டும். |

### 4 கணக்களிப் பொறுப்பு மற்றும் நல்லாளுகை

#### நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் விதிகளின் படி சபையினால் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டிருந்த போதிலும் அவற்றை நெருங்குவதற்காக மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக சுட்டிகள் இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்படும் என. | குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்த வேண்டும். |